பத்திரிக்கை செய்தி

## வறட்சி நிவாரணத் திட்டம் 2016-17

### குறுகிய காலத்தில் சோளம் இறவை பயிராக ஒரு ஏக்கரில் பயிரிடும் திட்டம்

தமிழகத்தில் பருவமழைக் காலங்களில் மட்டுமே மழையினை நம்பியிருக்கக் கூடிய சூழ்நிலை உள்ளது. குறிப்பாக வடகிழக்குப் பருவமழையினால் தான் தமிழகத்திற்கு கணிசமான அளவிற்கு மழை பெய்கின்றது. வேளாண்மை உற்பத்தியும் மற்றும் அதனைச் சார்ந்த நடவடிக்கைகளும் சரியான காலத்தில் பெய்யும் மழையின் அளவினையும், தமிழகத்தில் பரவலாக எல்லாப் பகுதிகளில் பெய்வதை பொறுத்தே அமைகின்றது. ஆனால், இந்த வருடத்தில் பொய்த்த சொற்பமான வடகிழக்குப் பருவ மழையினால் பயிரிடப்பட்ட விவசாயப் பயிர்களில் வளர்ச்சி குன்றியும், உற்பத்தித் திறனும் பாதிக்கப்பட்டு அதனால் கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாடு உருவாகியுள்ளது. இத்தகைய தீவனத் தட்டுப்பாட்டினால், கால்நடைகளின் வாழ்வாதாரத்தையே சீர்குலைப்பதோடு மட்டுமல்லாமல், அதனால் விளையக்கூடிய துன்பத்தினால் கால்நடைகளைப் பராமரிக்க முடியாமல் 'துன்பத்தை மையமாகக் கொண்ட கால்நடைகளின் விற்பனை' (DISTRESS SALE OF ANIMALS) அதிகரிக்க வாய்ப்புகள் ஏராளம் ஆகும். எனவே, இதைத் தடுத்திட, கிராம அளவில் பசுந்தீவன உற்பத்தியினை உறுதி செய்ய வேண்டியது "வறட்சியினைத் தணிக்கக் கூடிய நடவடிக்கைகளுள் முக்கியமான ஒரு நடவடிக்கையாகும்".

தமிழகத்தில் 88.14 இலட்சம் பசுவினமும், 7.81 இலட்சம் எருமையினமும் உள்ளன. இவற்றில் 59.41 இலட்சம் பசுவினமும், 5.33 இலட்சம் எருமையினமும் பால் உற்பத்தியில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கால்நடைகளின் ஜீவாதாரத்திற்காக பசுந்தீவன உற்பத்தியனை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

இந்த நோக்கத்தினை எய்திட/அடைந்திட தமிழகத்தில் விதைக்கப்படாமலுள்ள மொத்தப் பரப்பினையும் வறட்சியினை எதிர்த்துத் தாங்கக் கூடிய ஆண்டு தானியப் பயிரான குறுகிய கால தீவனச் சோளத்தினை 60 நாட்களுக்குள் உற்பத்தி செய்து அதை பசுந்தீவனமாகவோ அல்லது உலர் தீவனமாகவோ வரப்போகின்ற வறட்சி காலத்தில் கால்நடைகளுக்கு வழங்கி விவசாயிகளின் துன்ப நிலையில் கால்நடைகளின் விற்பனையினைத் தவிர்த்து பராமரிப்பதற்காக உருவாக்கப்பட்டது தான் இந்த "வறட்சியினைத் தணிக்கும் திட்டமாகும்".

இந்த திட்டத்தில் சேர்ந்து பயனடைய விருப்பமுள்ளப் பயனாளிகளை கால்நடை பராமரிப்புத்துறை அடையாளங்கண்டு, அப்பயனாளிகளுக்கு அவர்களுடைய நிலத்தினை சீர்படுத்திடவும், உரங்கள் மற்றும் விதைகள் போன்ற இடுபொருட்களுக்கு 50 சதவீத அளவில் மான்யத்தினை வழங்கிட பசுந்தீவன உற்பத்தியில் அவர்களை ஈடுபடுத்தி தேவைப்படும் விவசாயிகளுக்கு பயிரிடப்பட்ட 50 நாட்களுக்கு பின் இப்பசுந்தீவனத்தை உற்பத்தியாளர்களே நேரடியாக விற்பனை செய்து வறட்சி காலத்தில் பசுந்தீவன உற்பத்தியினைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்திற்கென 600 ஏக்கரில் ஆண்டு தானியப் பயிரான குறுகிய கால தீவனச் சோளத்தினை 50 சதவீத மான்யத்தில் உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ள விவசாயிகள், இறவைப் பாசனம் உள்ள, ஒரு ஏக்கர் நிலம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நிலத்தை தயார் செய்வது, உரமிடுதல், விதைகள் கொள்முதல் மற்றும் விதைத்தல் தொடர்பாக, ஒரு ஏக்கருக்குரிய செலவு, 4000 ரூபாயில், 50 சதவீதமான, 2000 ரூபாய், சம்பந்தப்பட்ட விவசாயிக்கு, விதைகள் விதைக்கப்பட்ட, மூன்று வாரங்கள் கழித்து, கால்நடை பராமரிப்புத் துறையால் மான்யமாக வழங்கப்படும்.

விதைகள் விதைக்கப்பட்ட, 50 நாட்கள் கழித்து, தீவன சோளப் பயிரை அறுவடை செய்து, கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்திக் கொள்ளலாம். சுய தேவைக்கு மேல் உள்ள பசுந்தீவனத்தை, தேவையுள்ள சக விவசாயிகளுக்கு விற்பனையும் செய்து கொள்ளலாம்.

எனவே, வறட்சியால் ஏற்பட்டுள்ள பசுந்தீவன தட்டுப்பாட்டை போக்கிடும் வகையில் குறுகிய கால பசுந்தீவன சோளத்தை பயிரிட்டு, பசுந்தீவன உற்பத்தியை அதிகரித்து, கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்திக் கொள்ளலாம். விருப்பம் உள்ள விவசாயிகள், அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

ஓம்/- ********
மாவட்ட ஆட்சித்தலைவர்

15/2/17.
செ.ம.தொ.அ.
வேலூர்-9.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை, வேலூர்-4.